

தலைமைச் செயலகத்தில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையில் நேற்று முன்தினம் (12.07.2023) கனிம வளத்துறையின் செயல்பாடுகள், முன்னேற்றம், வருவாய் உயர்த்துதல் போன்றவை குறித்து ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இயற்கை வளங்கள் துறை கூடுதல் தலைமைச்செயலாளர் க.பணீந்திரரெட்டி, இயற்கை வளங்கள் துறை சிறப்பு செயலாளர் திருமதி பூஜாகுல்கர்னி, கனிம வளங்கள் துறை இயக்குநர் எல். நிர்மல்ராஜ், மற்றும் கனிம வளத்துறை மண்டல, மாவட்ட அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



'முத்தமிழறிஞர் கலைஞர்அவர்களின் நூற்றாண்டு ஆட்சிமொழி கருத்தரங்கத்தை நேற்று முன்தினம் (12.07.2023) சென்னை, தரமணி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தொடங்கி வைத்து, கிரேக்கக் காப்பியங்களான ஹோமரின் இலியத் மற்றும் ஓமரின் ஒடிசி ஆகிய புத்தகங்களை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு.இரா.செல்வராஜ், தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் ஔவை ந.அருள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர்(பொறுப்பு) கோபிநாத் ஸ்டாலின், நூலாசிரியர் சின்னத்தம்பி ஆகியோர் உள்ளனர்.

### உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா ஆட்சிமொழிக் கருத்தரங்கு!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜூலை 14-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாடுவதையொட்டி தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் 38 மாவட்டங்களிலும் 100 ஆட்சிமொழிக் கருத்தரங்கம் 6 திங்களில் நடத்தப்பெற திட்டமிடப்பெற்றுள்ளது.

இதன் தொடக்கமாக 12.07.2023 அன்று சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் முதல் நிகழ்ச்சியை தொடங்கி வைத்து விழாப் பேருரை ஆற்றினார். தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் மரு. இரா. செல்வராஜ், வாழ்த்துரை வழங்கினார். தமிழ் வளர்ச்சி இயக்குநர் ஔவை ந. அருள் வரவேற்புரை வழங்கினார்.

இவ்விழாவில் முதலாவதாக முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குத் திட்ட அறிவிப்பான பிற நாட்டு இலக்கியங்களைத் தமிழ்மொழியில் மொழி பெயர்த்து அச்சிட்டு வெளியிடும் திட்டத்தின்கீழ் கிரேக்கக் காப்பியங்களான ஓமரின் 'இலியட்' மற்றும் 'ஒடிசி' ஆகிய நூல்களை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் வெளியிட்டார். முதல்படியை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் மரு. இரா. செல்வராஜ், பெற்றுக் கொண்டார். நூலின் மொழி பெயர்ப்பாளர் பொன். சின்னத்தம்பி முருகேசன் ஏற்புரை வழங்கினார்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா ஆட்சிமொழிக் கருத்தரங்கினை தொடங்கி வைத்து ஆற்றிய உரை:-

நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்களால் அவர் கண்ட கனவாக இன்றைக்கு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் என்கின்ற வகையில் இங்கே சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டு நம்முடைய முத்தமிழறிஞர் அய்யா கலைஞர் அவர்களால் வழி நடத்தப்பட்டு , அவர்கள் எல்லாம் இதை சிறப்புற கொண்டு செல்லவேண்டும், நம்முடைய தமிழ் மொழியை உயிர்ப்பித்தாக வேண்டும் என்கின்ற வகையில் பாதுகாத்தாக வேண்டும் என்கின்ற அடிப்படையில் தொலை நோக்குப் பார்வையோடு இந்த அமைப்பை உருவாக்கி, அதன்மூலமாக இந்த நிகழ்ச்சி இங்கே நடைபெற்று அதையெல்லாம் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். அந்த வகையில்

கல்வி சிறந்த தமிழ்நாடு - புகழ்

கம்பன் பிறந்த தமிழ் நாடு

என்று மகாகவி பாரதி அன்று பாடியதைப் போல

கலைகள் செழித்த தமிழ் நாடு - எம்

கலைஞர் உதித்த தமிழ் நாடு

என்று நாமும் இன்று பாடுகிறோம்.

அந்த வகையில், நமது பண்பாட்டின் மலர்ச்சிக்கு, கலைகளின் எழுச்சிக்கு அடிவேராக அமைந்த அன்னை தமிழின் வளர்ச்சிக்கு எண்ணற்ற திட்டங்களைத் தீட்டியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

நம் தமிழ், வெறும் காட்சிமொழியாக மட்டுமல்லாமல், ஓர் ஆட்சிமொழியாகவும் இருக்கவேண்டும் என்பது கலைஞர் கண்ட கனவு.

முத்தமிழறிஞர் கலைஞரின் அந்தக் கனவை நனவாக்கும் முயற்சியில் கலைஞர் நூற்றாண்டில் களமிறங்கி இருக்கிறது இந்த தமிழ் வளர்ச்சித் துறை.

ஓங்காப்புகழ் தொல்காப்பியர் காலத்தில் தமிழ் நாட்டில் தமிழே ஆட்சி மொழியாகத் திகழ்ந்தது என்பதற்கு தொல்காப்பியத்துள் எடுத்தாண்டுள்ள சொற்களே இன்றும் சான்றுகளாக நிற்கின்றன. அவை, அவையம், ஆக்கம், ஆசிரியர், ஆராய்ச்சி, ஆற்றல், இரங்கல், உத்தி, ஊர்தி, காவலர், கொடை, கோட்டம், சார்பு, சிறை, சீர்மை, செய்தி, தகுதி, தெரிவு, தொழில், பாசறை, பொருண்மை, மரபு, மாண்பு, மொழிபெயர்ப்பு, வலியுறுத்தல், வேண்டுதல், முனைவர், முதல்வர் என்பன போன்ற பல சொற்களை தொல்காப்பியர் எடுத்தாண்டுள்ளதைக் கூர்ந்து நோக்கின் இவற்றுள் மேற்குறித்த சொற்கள் இன்றும் ஆட்சிச் சொல்லுக்குரிய தகுதியோடு பயன்பாட்டில் இருப்பதை அறியலாம்.

**உயர் தனிச் செம்மொழி!**

சங்கத் தனிப் பாடல்களின் தொகை 2381 என்பர். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சங்கத் தமிழ் இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்ட சில சொற்கள் இன்றும் எவ்விதப் பொருள் மாற்றமுமின்றி அன்றாட வாழ்விலும், ஆட்சியிலும் பயன்படுத்தப்பட்டுவரும் சிறப்பைக் காணும் பொழுது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால், உயர்தனிச் செம்மொழியாக ஏற்றம் தந்த சிறப்பினைக் கண்டு இன்று நாம் அனைவரும் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்திருக்கிறோம்.

சங்க இலக்கியத்தில், பயன்படுத்தப்பட்ட சொற்களான அடகு, அண்ணல், அயலார், அரங்கு, அரசியல், ஆவணம், கட்டளை, கழகம், கூலி, சான்று, சிறு தொழில், சீருடை, தகைமை, நிதி, நுகர்வோர், பேரணி, மண்டபம், மாட்சி, வழங்குநர் என்பன போன்ற சொற்கள் இன்றும் ஆட்சிச் சொற்களாக வழங்கி வருவதை எண்ணும் பொழுது தமிழ்மொழியின் தொன்மைக்கு இவற்றைவிடப் பெருமிதம் என்னவென்று சொல்வது.

27.12.1956ல் தமிழ் ஆட்சிமொழிச் சட்டம் நிறைவேற்றப்பட்டு, 1957ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 23ஆம் நாளன்று தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப் பெற்று, தமிழ்நாட்டில் தமிழ் மட்டுமே ஆட்சி மொழியாகும் என்ற சட்டம் நிறைவேறிய பிறகு 1957ல் ஆட்சிமொழிக் குழுவை அரசு ஏற்படுத்தியது. இக்குழு தமிழ்நாடு முழுவதிலும் உள்ள அரசு அலுவலகங்களை ஆய்வு செய்து தமிழில் அலுவல்களை நடத்த அறிவுரைகளை வழங்கியது.

நூற்றாண்டு நாயகர் எங்களையெல்லாம் வழிநடத்தி வாழ்வித்த பெருமகனார், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நல்லாட்சியில் 28.05.1971 அன்று வெளியிடப்பட்ட அரசாணையின்படி, தமிழ் வளர்ச்சி இயக்ககம் என்ற புதிய தனித் துறைத் தலைமை அலுவலகமாகத் தோற்றுவிக்கப்பட்டது. அத்துறையிடம் ஆட்சி மொழிக் குழுவின் பணிகள் அனைத்தும் ஒப்படைக்கப்பட்டன.

**தமிழில் பெயர்ப் பலகை!**

சட்டம், ஆணைகள், அரசாணைகள், அறிவிக்கைகள், அறிவிப்புகள், கடிதங்கள், குறிப்பாணைகள் அனைத்தும் தமிழிலேயே செயற்படுத்துவதில் தமிழ் வளர்ச்சித் துறை முனைந்து ஈடுபட்டுவருகிறது.

அரசு அலுவலர்கள், பணியாளர்கள் அனைவரும் தமிழிலேயே கையொப்பம் இடுதல், பெயர்களின் முன்னால் இடம்பெறும் தலைப்பெழுத்துகள் தமிழிலேயே எழுதப்படும் முறையையும் பின்பற்றச் செய்தல், ஆட்சிமொழித் திட்ட விதிமுறைகளின்படி, பதிவேடுகள் அனைத்தும் தமிழிலேயே பேணப்படுவதையும், தமிழில்தான் அச்சிட்டு வழங்க வேண்டும் என்பதும் இன்றியமையாதப் பணிகளாகும்.

அரசின் துறைத் தலைமை அலுவலகங்கள், மாவட்ட நிலை அலுவலங்கள் ஆகியவற்றின் பெயர்ப் பலகைகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் வைக்கப்பட வேண்டும் எனவும் எழுத்துகளின் அளவு முறையே 5:3 என்ற வீதத்தில் அமைய வேண்டும் எனவும் இவ்வலுவலகங்களைத் தவிர பிற அலுவலகங்களில் (சார்நிலை) பெயர்ப் பலகைகள் தமிழில் மட்டுமே அமைவது போதுமானதெனவும் அரசு ஆணையிட்டுள்ளதை நாம் அனைவரும் அறிவோம்.

அதே போல, தொடர்ந்து வணிக நிறுவனங்களிடமும் இக்கருத்தினையே வலியுறுத்தி வருவதை நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள். வணிக நிறுவனத்தின் பெயர்ப் பலகைகள் தமிழில்தான் முதலில் இடம்பெறுதல் வேண்டும். இரண்டாவதாக ஆங்கிலப் பெயரும், தேவைப்படின் பிற மொழிக்கும் என 5:3:2 என்ற எழுத்து வடிவில் இருக்க வேண்டும் என்று அரசு ஆணையிட்டுள்ளது. அவ்வாணைக்கிணங்க, தமிழ்நாடு வணிகர் சங்கத் தலைவரும், உறுப்பினர்களும் அரசுடன் இணைந்து தமிழில் பெயர்ப் பலகைகளைத் தட்டாமல் வைப்போம் என்று இசைவு தெரிவித்துள்ளதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த மகிழ்ச்சியான நேரத்தில், தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக வழங்கப் பெறும் எண்ணற்ற விருதுகளுக்கு முத்தாய்ப்பாக தமிழ் வளர்ச்சித் துறைக்கு தனி அமைச்சகம் அமைத்து, தானே அமைச்சராகவும் பொறுப்பேற்று தமிழுக்குச் செம்மொழித் தகுதிப்பேற்றினை ஒன்றிய அரசிடமிருந்து பெற்றுத் தந்த திராவிடத்தின் புதையல்

ஓடுகின்ற நதிகள் எல்லாம்

கூடுகின்ற கடலாக

பாடுகின்ற பாக்களை

சூடுகின்ற தமிழாக

வாடுகின்ற தமிழ் மக்கள்

நாடுகின்ற களஞ்சியமென

திகழ்ந்திட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரில் ஓர் உயரிய விருதை உருவாக்குவது தான் தமிழ் வளர்ச்சித் துறையின் இலக்காக சென்று கொண்டிருக்கின்றோம்.

**ஜூலை 17 அன்று திருவாரூரில் கருத்தரங்கு!**

சென்னையை அடுத்து, ஜூலை 17 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த மண்ணான திருவாரூரில் ஆட்சி மொழிக் கருத்தரங்கினை தமிழ் வளர்ச்சித் துறை நடத்தவுள்ளது என்பதையும் அறிந்து உவகை அடைகிறேன். வாழ்த்துகிறேன்.

வாய்ப்புக்கு நன்றி, நிகழ்ச்சியை சிறப்புற வாழ்த்தி, அதே நேரத்தில் நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற இரண்டாண்டு காலத்தில் இந்த தமிழ் வளர்ச்சித் துறையின் மூலமாக பல்வேறு ஆக்கபூர்வமான பணிகளை இட்டிருக்கின்றார்கள். அந்த வகையில் தொடர்ந்து இந்த தமிழ் வளர்ச்சித் துறை அவருடைய இலக்கை, அவருடைய கனவை நிறைவேற்றுகின்ற வகையில் நிச்சயமாக செயல்படும். அதற்கு உங்களை போன்றவர்களுடைய ஒத்துழைப்பு தேவை என்பதை இந்த நேரத்தில் சொல்லி, நிகழ்ச்சிக்கு வாழ்த்து கூறி, வாய்ப்புக்கு நன்றி கூறி நிறைவு செய்கிறேன்.

தொடர்ந்து கவிஞர் நெல்லை ஜெயந்தா "முத்தமிழறிஞர் கலைஞர் நிகழ்த்திய செம்மொழி செயற்பாடுகள்" என்ற தலைப்பிலும், கூ.வ. எழிலரசு, (மேனாள் தமிழ் வளர்ச்சி இயக்குநர்) "காலந்தோறும் தமிழ் ஆட்சிமொழி வரலாறு" என்ற தலைப்பிலும், திருமதி க.பவானி, (சேலம் மண்டிலத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர்) "குறிப்புகள் வரைவுகள் எழுதுதல் தொடர்பில் தீர்வுகள்" என்ற தலைப்பிலும், ஆக்கம் மதிவாணன், (வழக்குரைஞர்,) "அரசுப் பணியாளர்களும் ஆட்சிமொழி சட்டமும்" என்ற தலைப்பிலும், முனைவர் அண்ணா கண்ணன், (ஆசிரியர், வல்லமை மின்னிதழ்) "கணினித் தமிழ்" என்ற தலைப்பிலும், முனைவர் ஆ. மணவழகன், (இணைப் பேராசிரியர், சமூகவியல், கலை மற்றும் பண்பாட்டுப்புலம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்) "மொழிப்பயிற்சி" என்ற தலைப்பிலும் கருத்துரையாற்றி கருத்தரங்கத்தை சிறப்பித்தனர். இக்கருத்தரங்கில் 100க்கும் மேற்பட்ட அரசு பணியாளர்கள் மற்றும் கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

இவ்விழாவில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் மரு. இரா. செல்வராஜ், தமிழ் வளர்ச்சி இயக்குநர் ஔவை ந. அருள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர்(பொ) கோபிநாத் ஸ்டாலின், தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் திருமதி பொ. பாரதி, பேராசிரியர்கள், அரசு அலுவலர்கள், தமிழறிஞர்கள், ஆகியோர் கலந்து கொண்டனர்.



தேனி தெற்கு மாவட்டம் புதுப்பட்டி பேரூராட்சியில் புதிய கூட்டுக் குடிநீர்அம்ரீத்20 திட்டம்மூலம் தெற்கு மாவட்ட செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார். உடன் பேரூராட்சி தலைவர் சுந்தரி பாஸ்கரன், தெற்கு மாவட்டத் தொழிலாளர் அணி அமைப்பாளர் செந்தில், பேரூர் செயலாளர் ராஜ்குமார் மற்றும் துணை தலைவர் கவுன்சிலர்கள், அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

### தூத்துக்குடி வடக்கு மாவட்டத்தில்

# சட்டமன்ற தொகுதி வாரியாக பாகமுகவர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் கீதா ஜீவன் வேண்டுகோள்!



தூத்துக்குடி, ஜூலை 14-

தூத்துக்குடி வடக்கு மாவட்டத்தில் சட்டமன்ற தொகுதி வாரியாக பாக முகவர்கள் (BLA-2) கூட்டம் குறித்து மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கீதாஜீவன் அறிவிப்பு வருமாறு:-

இந்திய தேர்தல் ஆணையம் 01.01.2024 ஆம் தேதியை வாக்காளர் தகுதி ஏற்படுத்தும் நாளாக கொண்டு வாக்காளர் சுருக்க முறை திருத்தப் பட்டியலை அறிவித்துள்ளது.

அதன்படி 01.01.2024 வரை 18 வயது பூர்த்தியடைந்தவர்கள் விடுபட்ட வாக்காளர்கள் தங்கள் பெயர்களை வாக்காளர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளவும், வாக்காளர் பட்டியலில் பெயர் நீக்கல், திருத்தம், முகவரி மாற்றம் மற்றும் ஆதார் எண் இணைத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளலாம்.

மேலும் 21.07.2023 முதல் 21.08.2023 வரை வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் (BLA-2) வீடுவீடாகச் சென்று வாக்காளர்களின் விபரங்களை சரிபார்க்கும் பணியில் ஈடுபட இருக்கிறார்கள்.

இதில் நம்முடைய தி.மு.கழகத்தின் சார்பில் நியமனம் செய்யப்பட்டுள்ள பாக முகவர்களின் (BLA-2) பணி குறித்து ஆலோசனை செய்வதற்காக தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட (1) தூத்துக்குடி (2) கோவில்பட்டி (3) விளாத்திகுளம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்கான பாக முகவர்கள் கூட்டம் கீழ்க் கண்ட தேதிகளில் அறிவிக்கப்பட்ட இடங்களில் நடைபெற இருக்கிறது.

இதில் சம்பந்தப்பட்ட தொகுதிக்கு உட்பட்ட மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர்க் கழகச் செயலாளர்கள், வட்ட கழக செயலாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், பாகமுகவர்கள் அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று தவறாது கலந்து கொள்ள அழைக்கிறேன்.

**பாக முகவர்கள் கூட்டம் விபரம்!**

**நாள், நேரம், சட்டமன்ற தொகுதி, கூட்டம் நடைபெறும் இடம்**

16.07.2023 ஞாயிற்றுக் கிழமை - காலை 10.00 மணி - தூத்துக்குடி தொகுதி -கலைஞர் அரங்கம், தூத்துக்குடி

16.07.2023 ஞாயிற்றுக் கிழமை - (மாலை 6.00 மணி - கோவில்பட்டி தொகுதி - சத்தியபாமா திருமண மண்டபம், கோவில்பட்டி

22.07.2023 சனிக்கிழமை - மாலை 5.00 மணி - விளாத்திகுளம் தொகுதி - ஜி.வி.எம். மஹால், அம்பாள் நகர், விளாத்திகுளம்

இவ்வாறு கீதாஜீவன் அறிவித்துள்ளார்.

## 'வாட்ஸ் அப்'பில் வந்தது!






இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் வகையில் பரமக்குடி அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் தொழில் 4.0 தொழில்நுட்ப மையம் துவங்கப்பட்டது. இராமநாதபுரம் மாவட்டத்தில் இராமநாதபுரம், பரமக்குடி மற்றும் முதுகுளத்தூர் ஆகிய மூன்று அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் தலா ரூ. 34.65 கோடி மதிப்பில் தொழில்நுட்ப மையம் கழகத் தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொளி காட்சி மூலம் திறந்து வைக்கப்பட்டது. இதனை அடுத்து பரமக்குடி அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் தொழில் 4.0 தொழில்நுட்ப மையத்தினை மாவட்ட கழகச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம்,எம். எல். ஏ. குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் பரமக்குடி எம் .எல்.ஏ, முருகேசன்,மற்றும் முன்னாள் அமைச்சர் டாக்டர் எஸ் சுந்தர்ராஜன், மாவட்ட ஆட்சித் தலைவர் விஷ்ணு சந்திரன் மற்றும் இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் நவாஸ் கனி, மற்றும் பலர் கலந்து கொண்டனர்.